# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில்அருகில்), எல்டாம்ஸ்ரோடுசந்திப்பு,**
**தேனாம்பேட்டை, சென்னை 600 018. தொலைபேசி எண்: 24347590**

**ஆணை நாள் – 25.02.2015**

**முன்னிலை**

**திரு. S.F.அக்பர், B.Sc., B.L.,**
**மாநில தகவல் ஆணையர்**

**வழக்கு எண். 6190/F/2014**

| | | |
|---|---|---|
| திருமதி நா.ராணி,<br>க/பெ. நாகேந்திரன்,<br>எண்.8, ஜி.எஸ்.டி. ரோடு,<br>சாமூண்டீஸ்வரி நகர், தைலாவரம்,<br>காட்டாங்குளத்தூர் அஞ்சல்–603 203,<br>காஞ்சிபுரம் மாவட்டம். | .. | மேல்முறையீட்டாளர் |
| பொதுத் தகவல் அலுவலர்/ செயற்பொறியாளர்<br>(இயக்குதல் மற்றும் பராமரிப்பு),<br>தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக்<br>கழகம், மறைமலைநகர்–603 209,<br>காஞ்சிபுரம் மாவட்டம். | .. | பொது அதிகார அமைப்பு |

*****

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று (25.02.2015) நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திருமதி நா.ராணி ஆஜராகவில்லை. மேல்முறையீட்டாளர் ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ள கடிதத்தில், திரு.நித்தியகுமார் என்பவரை இன்றைய விசாரணைக்கு தனது சார்பாக ஆஜராக அனுமதிக்குமாறு கோரி கடிதம் தாக்கல் செய்துள்ளார். அதனையேற்று இன்றைய விசாரணைக்கு திரு.நித்தியகுமார் அனுமதிக்கப்பட்டார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திருமதி ஏ.எஸ்.மால்லதிஸ்ரீ, செயற்பொறியாளர், இயக்கம் மற்றும் பராமரிப்பு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், மறைமலைநகர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்கள் ஆஜரானார்.

2. மனுதாரர், 03.02.2014 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் தாக்கல் செய்த இரண்டாவது மேல்முறையீட்டின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (25.02.2015) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மனுதாரர் 27.09.2013 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்த மனு மற்றும் 25.11.2013 அன்று சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீடு ஆகியவற்றின் அடிப்படையில் ஆனதாகும்.

3. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்த மனுவில், அவர் 04.01.2013ஆம் நாளிட்டு உதவி செயற்பொறியாளர், கூடுவாஞ்சேரி அவர்களுக்கு பதிவஞ்சலில் அனுப்பிய மனுவின் நகல் ஒன்றை செயற்பொறியாளர் (இயக்கம் மற்றும் பராமரிப்பு) அவர்களுக்கு அனுப்பியதாகவும், அந்தப் புகார் மனுவானது தற்சமயம் என்ன நடவடிக்கைக்காக வைக்கப்பட்டுள்ளது என்றும், அந்தப் புகார் மனு அலுவலகத்தில் எந்தெந்த பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளதோ அதன் நகல் என்பன உள்ளிட்ட 16 இனங்களுக்கான தகவல்களைக் கேட்டிருக்கிறார். சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீடும், அதனைத் தொடர்ந்து, சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் இரண்டாம் மேல்முறையீடும் செய்யப்பட்டிருக்கிறது. மனுதாரர் ஆணையத்திற்கு தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது இன்று (25.02.2015) விசாரணை நடத்தப்பட்டது.

4. இன்றைய விசாரணையின் போது, பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு அவர் கோரிய அனைத்து இனங்களுக்கான தகவல்களும், 25.10.2013ஆம் நாளிட்ட கடிதம் வாயிலாகவும், மேல்முறையீட்டு அலுவலரால் 30.12.2013ஆம் நாளிட்ட கடிதம் வாயிலாகவும், வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதற்கான ஆதாரங்களை தாக்கல் செய்திருக்கிறார். மனுதாரர் கேட்டிருக்கின்ற தகவல்கள் ஒவ்வொரு இனம் வாரியாகப் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் 24.05.2011 அன்று புதிய மின் இணைப்பு கோரி விண்ணப்பம் செய்து, உரிய வைப்புத் தொகையைச் செலுத்தியிருக்கிறார். 29.03.2012 அன்று தான் மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மின் இணைப்பு கொடுக்கப்பட்டதற்கான, மின் இணைப்பு மீட்டர் அட்டை மனுதாரருக்குக் கொடுக்கப்படவில்லை. அதைப் பொறுத்துத் தான் மனுதாரர் தகவல்கள் கேட்டிருக்கிறார். அவர் கேட்டிருக்கும் தகவல்கள் அனைத்தும், மேற்சொன்ன நிகழ்வையொட்டியே அமைந்திருக்கின்றன. பொதுத் தகவல் அலுவலர் புதிய மின் அட்டையை வழங்கி, மனுதாரரின் கோரிக்கையை நிறைவேற்றியிருக்கிறார். மனுதாரரின் கோரிக்கை நிவர்த்தி செய்யப்பட்டிருப்பதும், அவர் கேட்டிருக்கும் அனைத்து இனங்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ள விவரமும், ஆவணங்களின் வாயிலாகத் தெரிய வருகிறது.

5. ஆக, இந்த வழக்கைப் பொறுத்தவரை, மனுதாரருக்கு அவர் கோரிய அனைத்து இனங்களுக்கான தகவல்களும் வழங்கப்பட்டுள்ள நிலையில், இதில் மேலும் பரிசீலனை செய்ய வேண்டிய வேறு அம்சங்கள் எதுவுமில்லை எனக் கருதி, இந்த மேல்முறையீடு இத்துடன் முடிக்கப்படுகிறது.

**ஒம்/– (எஸ்.எஃப். அக்பர்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். 6190/F/2014</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/ செயற்பொறியாளர்
(இயக்குதல் மற்றும் பராமரிப்பு),
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
மறைமலைநகர்–603 209,
காஞ்சிபுரம் மாவட்டம்.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திருமதி நா.ராணி,
க/பெ. நாகேந்திரன்,
எண்.8, ஜி.எஸ்.டி. ரோடு,
சாமூண்டீஸ்வரி நகர், தைலாவரம்,
காட்டாங்குளத்தூர் அஞ்சல்–603 203,
காஞ்சிபுரம் மாவட்டம்.

jb.0403